**05.03.2024 MCOP.No.37/2021**

ம.சா.2 **பெயர்:** சக்திவேல்

**<u>சாட்சி ஆஜர். பிரமாணம் செய்யயப்பட்டார் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை எதுவும் வரவில்லை என்றால் சரிதான். மனுதாரர் கேட்டு கொண்டதின் பெயரில் சாட்சியம் அளிக்க வந்து உள்ளேன். விபத்தை கேள்விப்பட்ட பிறகு சென்று பார்தேனா என்றால் இல்லை, நான் வந்து கொண்டு இருக்கும் போது விபத்தை நேரில் பார்த்தேன். இறந்து போன நபருக்கு பின்னால் இருசக்கர வாகனத்தில் சென்று கொண்டு இருக்கும் போது பார்த்தேன். விபத்து குறித்து காவல்நிலையத்தில் நான் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான், காவல் நிலையம் நானும் சென்றேன். விபத்து குறித்து போலிஸ் என்னை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தார்கள். நான் கூறுவது போல் போலிஸ் என்னை விசாரிக்கவில்லை என்றால், சரியல்ல. விபத்தில் அடிப்பட்டவருக்கு தலையில் காயம் ஏற்பட்டது என்றால் தலையிலும் ஏற்பட்டது கையிலும், காலிலும் அடிப்பட்டது. தலையில் பலத்த காயம் ஏற்பட்டதால் இறந்து விட்டார் என்றால் காலும், கையிலும் பலத்த காயம் ஏற்பட்டு இருந்தது மற்ற விவரம் தெரியாது. விபத்து சமயத்தில் தலை கவசம் அணிந்து இருந்தால் தலையில் காயங்கள் ஏற்பட்ட வாய்ப்பு இல்லை என்றால் தலை கவசம் அணிந்து இருந்தார். விபத்து சமயத்தில் இரண்டு வாகனங்கள் நேருக்கு நேர் மோதி கொண்டது என்றால் இல்லை, பிக்கப் வாகனத்திற்கு வலது புறமும் இருசக்கர வாகனத்தில் இடது புறமும் மோதி விபத்து ஏற்பட்டது. விபத்து சாலையின் மையப்பகுதியில் ஏற்பட்டது என்றால் சாலையின் பக்கவாட்டில் தான் ஏற்பட்டது. பக்கவாட்டு என்பது இருசக்கர வாகனத்திற்கு இடது புறம் ஆகும். இருசக்கர வாகனத்தின் ஓட்டுநரின் கவன குறைவால் விபத்து காரணம் என்றாலும் மனுதாரருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

SENTHIL KUMAR RAJAVEL

Subordinate Judge
Digitally signed by SENTHIL KUMAR RAJAVEL
Location: Uthangarai